இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 30-01-2025

# தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் ஆளுநர்

"தமிழ்நாட்டின் வளர்ச்சி சரிவுப் பாதையில் செல்கிறது" என்று சொல்லி இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. தமிழ்நாட்டின் வளர்ச்சி சரிய வேண்டும் என்று ஆளுநர் நினைக்கிறார். அது தான் உண்மை.

தமிழ்நாட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு 'உண்ட வீட்டுக்கு ரெண்டகம்' நினைத்துக் கொண்டிருக்கிறார் ஆளுநர். எவ்வளவு கெட்ட எண்ணமும் குறுமதியும் கொண்டவராக ரவி இருக்கிறார் என்றால், குடியரசு தினத்தன்று அவர் விடுத்த அறிக்கையே போதும். அவரது இழி எண்ணத்தின் மொத்த படப்பிடிப்பாக அந்த அறிக்கை அமைந்துள்ளது.

"முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை விடுத்து மற்ற மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி இருக்கிறார் ரவி. இதற்கு என்ன ஆதாரம்? இப்படி வாய்க்கு வந்ததை ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு பேசலாமா? முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டுக்குள் வரக்கூடாது, வந்தாலும் போய்விட வேண்டும் என்ற துஷ்ட மனம் கொண்டவராக ரவி இருக்கிறார்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் உள்நாட்டு பன்னாட்டு நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு 893 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது.**

**இந்த ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பானது ரூ.10.07 லட்சம் கோடி ஆகும். இதன் மூலமாக 31 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இவை அனைத்தும் ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லும் தகவல்கள் அல்ல. இவை அனைத்துக்கும் ஆதாரங்கள் உள்ளன. யாரும் சும்மா வந்து ஒப்பந்தம் போட மாட்டார்கள்.**

* தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது. இது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா? பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (Economic advisory council report to pm report EACPM) அறிக்கையை எடுத்துப் பார்க்கவும். இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநில மாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது அந்த அறிக்கையில் இருக்கிறது. சொல்வது பிரதமரின் ஆலோசகர்? ஆளுநருக்கு அவரது அரைகுறை ஆலோசகர்கள் இதைச் சொல்வது இல்லையா?

* தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துவிட்டதை அவர் அறிய மாட்டாரா?

* பொருளாதார, சமூகக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது என்பதை ஒன்றிய அரசின் அறிக்கை களே சொல்கிறதே. அதை ஆளுநர் வாங்கிப் பார்க்கலாம்.

* 'மக்களைத் தேடி' மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்ற செய்தியை ஆளுநர் அறியவில்லையா?

* தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் பன்முக வறுமைக் குறியீடுகளின் கீழ் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு என்பதை தன்னைச் சுற்றி இருக்கும் (துக்ளக் ரசிகர் களை விலக்கிவிட்டு!) அதிகாரிகளைக் கேட்டு தெரிந்து கொள்ளலாமே ஆளுநர்!

* இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். சமூகத்தின் சரி பாதி யான பெண்களின் சமூக பங்களிப்பானது பாதிக்குப் பாதி என்ற சூழலை எட்டும் அமைதிமிகு மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருவதை அவர் விரும்பவில்லையா?

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் முக்கியமான ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மன்றத்தில் (World Economic ForumWEF2025) ஆண்டுதோறும் மாநாடு ஒன்று நடக்கும். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகாலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் எவரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. தி.மு.க. அரசு அமைந்த பிறகு கடந்த மூன்றாண்டுகளாகத்தான் தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில்துறை அமைச்சரும், துறை சார்ந்த அதிகாரிகள் வல்லுநர் குழுவும் பங்கேற்று வருகிறார்கள். இது குறித்து அறிக்கை வெளியிட்டிருக் கும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் முக்கியமான ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள்.

**"இந்த ஆண்டு கலந்து கொண்ட போது, டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தில் இந்தியா பெவிலியனைத் தொடங்கி வைக்கும் நிகழ்விலும் தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மராட்டிய மாநில முதலமைச்சர் மற்றும் சில மாநிலங்களின் அமைச்சர்களுடன் இணைந்து அந்த நிகழ்வில் பங்கேற்றேன். தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் உருவாகியுள்ள தொழில்வளர்ச்சியையும், தொழிற்கட்டமைப்புகளையும், புதிய முதலீடு களுக்கான சூழலையும் விளக்கி, ஏற்கனவே தொழில்துறையில் வளர்ந்துள்ள மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு ஆற்றி வரும் முக்கியப் பங்கினைக் குறிப்பிட்டேன்"** என்று குறிப்பிட்டு இருக்கிறார் தொழில் துறை அமைச்சர். தமிழ்நாட்டின் முன்னேற்றமானது சுவிஸ் வரைக்கும் பரவி இருக்கிறது. ஆனால் கிண்டி யில் இருந்து கொண்டு ஒருவர், இன்னமும் பொய்யைக் கிண்டிக் கொண் டிருக்கிறார்.

**'பூனை கண்ணை மூடிக் கொண்டதால் உலகம் இருண்டு விடாது' என்பதைத்தான் ஆளுநருக்குப் பதிலாகச் சொல்ல முடியும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.1.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில், முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவகத்தை திறந்து வைத்து, அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாவட்டம் – மணப்பாறை 'சிப்காட்' பகுதியில் – 400 ஏக்கர் பரப்பளவில் – பாரத்

# சாரண சாரணியர் வைரவிழா - கலைஞர் நூற்றாண்டு விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## மருத்துவ வசதிகள் குறித்து – அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

*சென்னை, ஜன.30-*

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாரத் சாரணர், சாரணியர் வைரவிழாவை தொடங்கி வைத்தவர், மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா (Jamboree) வை தொடங்கி வைக்கிறார்.***

*திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட் பகுதியில் 400 ஏக்கர் பரப்பளவில் பாரத் சாரணர், சாரணியர் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா (Jamboree) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.*

*இந்த விழாவினை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து மருத்துவத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இவ்விழா தொடக்கத்தின் முன்னதாக அப்பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த நிகழ்வு (Jamboree) 28.01.2025 முதல் 03.02.2025 வரை நடைபெற உள்ளது. இதற்காக மருத்துவத்துறை சார்பில் தலா 25 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை 2 எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளது.*

*சாரணர்களுக்கு 25 படுக்கைகளும், சாரணியர்களுக்கு 25 படுக்கைகள் என 50 படுக்கை வசதிகளுடன் மருத்துவமனை அமைக்கப் பட்டுள்ளது. இதில் தேசிய அளவில் 18,000 பேர் வரை கலந்து கொள்ள உள்ளார்கள். அதற்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை உருவாக்க மருத்துவத்துறை ஊழியர்கள் ஒரு மாதம் காலமாக சுமார் 3000 பேர் வரை பணிபுரிந்து வருகின்றனர். இங்கு 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவு, வெண்டிலேட்டர், Defibrillator, எக்ஸ்ரே, ஆய்வகம், மருந்தகம் போன்ற அனைத்து வசதிகளுடன் தயார் செய்யப்பட்டுள்ளது.*

**சுகாதார கண்காணிப்பு மையம்!**

*இது மட்டுமல்லாமல் 108 அவசர ஆம்புலன்ஸ் 25 வாகனங்கள் தயார் நிலையில் உள்ளது. அதற்காக பிரத்யேகமான சேவை மையம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. மேலும் சுகாதார கண்காணிப்பு மையம் (Health control Room) அமைக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை சார்பில் துணை சுகாதார நிலையங்கள் இந்த விழா (Jamboree) நடைபெறும் 400 ஏக்கரில் 10 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் மருத்துவ வாகனம் (Mobile Medical Unit) 15 அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் கடந்த 20.01.2025 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

*நேற்று முன்தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆம்புலன்ஸ் வசதிகள் மற்றும் நடமாடும் மருத்துவ வாகனச் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*மேலும் 29.01.2025 முதல் 03.02.2025 வரை மலையடிப்பட்டி எனும் கிராமத்தில் மலையேறும் பயிற்சி (Trekking) திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தினம் 200 பேர் மலையேறும் பயிற்சியில் ஈடுபட உள்ளனர். அதற்காக 2 துணை சுகாதார நிலையங்கள் மலையடிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.*

*ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் மலையடிப்பட்டி பகுதியில் உள்ளது, இந்த 2 துணை சுகாதார நிலையமும் சேர்த்து மொத்தம் 3 துணை சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும் இந்த விழாவில் (Jamboree) பங்கேற்பவர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் மருத்துவத்துறையில் சிகிச்சை வழங்க அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ளது. அவர்களுக்கு மேல்சிகிச்சை தேவைப்படும் நிலையில் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை வழங்க 25 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவக் குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.*

*அதற்கு மேலும் தீவிர சிகிச்சை தேவைப்படின் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரியில் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவக் குழு தயார் நிலையில் உள்ளது.*

*இந்த விழாவில் (Jamboree) அமைக்கப்பட்டுள்ள மருத்துவ வசதிகள் பொறுத்த வரை விளையாடும்போது கீழே விழுந்து அடிபடுதல், காய்ச்சல், மயக்கம், தலைவலி, உடல் சோர்வு, நீரிழப்பு போன்ற சிகிச்சைகள் வழங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை, அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மருத்துவமனைகளிலிருந்து மருத்துவர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். எனவே இந்த விழாவிற்கு (Jamboree) 750 பேர் கொண்ட மருத்துவக்குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.*

*இந்த ஆய்வின்போது தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.குமாரவேல், இணை இயக்குநர் மரு.கோபிநாத், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ஹேமசந்த் காந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் (காசநோய்) மரு.சாவித்ரி மற்றும் மருத்துவக்குழுவினர் உடனிருந்தனர்.*

# தருமபுரி சிப்காட் விரைவில் தொடக்கம் - இணையதளத்தில் பதிவு செய்யலாம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேட்டி!

*தருமபுரி, ஜன.30-*

*தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அடுத்த பாலஜங்கமனஹள்ளி கிராமத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு 15.99 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் 1.83 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து 524 பயனாளிகளுக்கு 5.24 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே கட்டப்பட்டு வரும் கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தினை ஆய்வு செய்தார்.*

*இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் பன்னீர்செல்வம், தருமபுரி மாவட்ட கூடுதல் ஆட்சியரகம் 38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. தற்பொழுது பணிகள் முடிகின்ற தருவாயில் இருந்து வருகிறது. இதனை பொதுப்பணித்துறை அமைச்சர் நேரில் ஆய்வு செய்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடம் பயன்பாட்டிற்கு திறக்கப்படும். அதே போல் தருமபுரியில் உள்ள சிப்காட் அனைத்து பணிகளும் முடிவுற்ற நிலையில் விரைவில் தொடங்கப்பட உள்ளது. அதற்காக இன்று முதல் 200 ஏக்கர் நிலம் இணையதளத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் செய்ய விரும்புவோர், இணையதளம் மூலமாக இன்று முதல் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விரைவில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்ட 2ம் கட்ட பணிகள் தொடங்கப்பட உள்ளது என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கி.சாந்தி எம்.பி., ஆ.மணி, கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் எம் எல் ஏ தடங்கம்.பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட பல் வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*




தருமபுரி மேற்கு மாவட்டம் பையர் நத்தம் பகுதியில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு,மற்றும் துணை முதல்வர் பிறந்தநாள் விழா பொது கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு 250 பெண்களுக்கு புடவையும், 100 ஆண்களுக்கு வேட்டி மற்றும் கல்வி நலத்திட்ட உதவிகளை வழங்கி,சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.